ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

# e-Newsletter

Vol 02: No: 09 - October 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

## இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஐரோப்பிய மாநாட்டில் ஆராய்வு

இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு முகம் கொடுத்து வரும் சவால்கள் தொடர்பாக பெல்ஜியத்தின் முக்கிய நகரான அன்டுவப்பில் நடைபெற்ற ஐரோப்பிய சுயாதீன பத்திரிகைப் பேரவையின் 14 ஆவது வருடாந்த மாநாட்டில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து பத்திரிகைப் பேரவை அறிமுகம் செய்துள்ள அந்நாட்டில் பத்திரிகைத் துறையினருக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்க நெறிக் கோவையை கண்காணித்து வருகின்றது. இருந்த போதும் அண்மையில் "நியுஸ் ஒப் த வேர்ல்ட்" பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் தொலை பேசி ஒட்டுக் கேட்டல் தொடர்பாக எழுந்த சர்ச்சையால் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நோரிட்டது.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இருகட்சி விசாரணைக் குழுவின் தலைவர் நீதிபதி லோசன் பிரபு மேற்கொண்ட விசாரணைகளின் அறிக்கைகளை 2001 ஆம் ஆண்டு யூலையில் சமர்ப்பித்திருந்தார். பத்திரிகைத்துறை மற்றும் பொலீசாரின் போக்குகள் தொடர்பாக பல கோணங்களில் கவனம் செலுத்தி அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்தில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை பொறிமுறை தோள்வியடைந்துவிட்டதா அல்லது ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட சட்ட வரைவு தேவைப்படுகின்றதா என்ற கடுமையான விமர்சனங்கள் எழுந்தமைக்கு இந்த விவகாரம் காரணமாய் அமைந்தது.

எல்லா பத்திரிகைகளும் ஒத்துழைக்கும் போது மட்டுமே இந்த சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை சாத்தியமாகக் கூடியதாகின்றது. இந்த முறையால் எதிர்பார்க்கப்படும் தேவை நிறைவேறவில்லையாயின் பத்திரிகைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான முறைப்பாடுகளை விசாரணை செய்து தீர்த்து வைப்பதற்காக அதற்கு பதிலாக மாற்று வழியாக சட்டத்தல் கட்டுப்படுத்தும் பொறி முறையொன்று அவசியமாகின்றது. இந்த முறையால் அவசியமான தேவை நிவைவேறவில்லையாயின் சட்டத்தால் கட்டுப்படுத்தும் முறை முன்வைக்கப்படுமானால் அதன் மூலம் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தண்டிக்கப்படும் நிலை ஏற்படுவதோடு அபராதம் விதிக்கப்படும் அல்லது அபராதமும் சிறைத் தண்டனையும் என்ற அடிப்படையில் தண்டனைகள் அமையும். இந்நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டுமாயின் பத்திரிகைகள், பத்திரிகை முறைப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவைப் பொறிமுறைக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்த மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்களில் முக்கியமனதாக அமைந்தது ஒழுக்கக்கோவையானது பத்திரிகைகளின் ஆசிரியர்களதும் ஊடகவியலாளர்களதும் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டதென்றால் அவர்களுக்கான பாதுகாப்பாக அமைவதால் அதனைப் பின்பற்றுவது அவசியமாகின்றது. அதன் மூலம் வெளித்தாக்கங்கள் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெற முடிகின்றது. அதனால் எந்நேரமும் பத்திரிகைகளின் அசிரியர்களும் ஊடகவியலாளர்களும் ஒழுக்கக்கோவை தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டியிருப்பதோடு கூடுதலான முக்கியத்துவம் வழங்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகைகளை கட்டுப்படுத்தும் அதிகாரியாக அல்லது இலாக்காவக செயற்படாது ஊடகங்களுடன் நண்பர்களாக செயற்படுவதும் முக்கியமானதாக அமைகின்றது. இந்த ஒத்துழைப்பே பத்திரிகைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கும் உதவியாக அமைகின்றது. அத்துடன் சுய கட்டுப்பாட்டுப் பொறி-முறையை பின்பற்றுவதில் சட்ட செயற்பாட்டுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்தளவுக்கு கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டதாகும். 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க முரண்பாட்டுத் தீர்வுச் சட்டத்தின் அடிப்படையில் இந்த ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக் குழுவால் வழங்கப்படுகின்ற தீர்ப்பானது உயர் நீதிமன்றத்தில் செல்லுபடியாகக் கூடியதாகும்.



பெல்ஜியத்தின் முக்கிய நகரான எண்டுவப்பில் எல்சன்வோட் மாநாட்டு மண்டபத்தில் 2012 அக்டோபர் 17~19 ஆம் திகதி வரை நடைபெற்ற சுயாதீன பத்திரிகைப் பேரவையின் 14 ஆவது வருடாந்த மாநாட்டின் நிறைவில் பிடிக்கப்பட்ட படம். மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகளை படத்தில் காணலாம்.

### Inside


- பரபரப்பை ஏற்படுத்தும் விடயங்களால் மக்கள் மத்தியில் பதற்றம், பீதியை ஏற்படுத்தக்கூடாது பக்-02
- அளவுக்கதிகமாக தற்கொலைகளை விவரிக்கும் செய்திகளை பிரசுரிப்பதாக இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கவலை பக்- 03
- கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தப்படும் கட்டுரைப் போட்டி பக்- 04

# பரபரப்பை ஏற்படுத்தும் விடயங்களால் மக்கள் மத்தியில் பதற்றம், பீதியை ஏற்படுத்தக்கூடாது

ஊடகங்களின் செயற்பாடுகள் மீது அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிப்பதால் ஊடக சுதந்திரம் பாதிக்கப்படுகிக்றது. ஆனாலும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதால் ஊடக சுதந்திரத்தைப் பாதகாத்துக்கொள்ள முடிகின்றது என்று இந்தியாவில் கோவாவின் ஆளுனர் மான்புமிகு ஸ்ரீ பாரத் விர் வான்சூ கூறினார்.

தெற்காசிய ஊடக மாநாட்டின் 9 ஆவது அமர்வு அண்மையில் இந்தியாவின் கோவாவில் நடைபெற்றது இம்மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். தெற்காசியாவில் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளும் அரசாங்க கட்டுப்பாடுகளும் என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றது.

இம் மாநாட்டில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் சார்பாக பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட் பங்குபற்றினார். இங்கு ஊடக ஒழுக்கக்கோவை மற்றும் அரசாங்கங்களால் ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது. கோவாவின் ஆளுனர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:.

ஒழுக்கக்கோவைகள் அல்லது ஊடகங்கள் மீதான ஒழுங்குவிதிகள் பொதுமக்களின் தேவை கருதி குறிப்பிடத்தக்க விடயங்களில் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமைகின்றது. ஆனாலும் ஊடக சுதந்திரம் பேனப்படுகின்றது. இருந்த போதும் அரசாங்கங்கள் ஊடகங்கள் மீது சட்டக் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதால் சுதந்திரம் மீது தடை விதிக்கப்படுவதாய் அமைகன்றது. இது ஊடக நிலைமைகளில் அவ்வளவு நல்லதாக இல்லை. ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளும் ஒழுக்கக்கோவையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களுக்கு ஒப்பானதாகும்.

மேலும் இந்திய அரசியல் அமைப்பானது பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதி செய்கின்றது. அனாலும் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டு சில விடயங்களில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இதில் பொதுமக்கள் பாதுகாப்பு, கொளரவம், தனித்துவம் என்பனவும் அடங்கும். ஆனாலும் இந்த போச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமானது பூரணத்துவம்மிக்க உரிமையாக இந்தியாவில் காணமுடிவதில்லை. ஏனெனில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றபோது நிதிமன்ற நடைமுறைகளின் ஊடாக நிவாரணம் தேடும் நடைமுறையும் இருந்து வருகின்றது.

அதனால் ஊடக காரியாலயங்களின் ஆசிரிய பீடங்கள் எப்போதும் ஒரு பொறுப்புணர்வை வெளிப்படுத்துவதும் பாதிப்புக்களைக் குறைக்கும் வகையில் கவனம் செலுத்துவதும் மிக முக்கியமானதாக அமைகின்றது. அத்துடன் சந்தையில் விற்பனையை குறிக்கோளாகக் கொண்டு சில செய்திகளை விறு விறுப்பாக்கி நாட்டிலும் சமூகங்கள் மத்தியிலும் பீதி, பதற்றத்தை ஏற்படுத்தும் விதமான செய்திகளை ஊடகங்கள்



தெற்காசிய ஊடக அமைப்பின் 9 ஆவது மாநாடு அண்மையில் இந்தியாவின் கோவாவில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். மாநாட்டின் முடிவில் பங்குபற்றிய பிரதிநிதிகள் கூட்டாக புகைப்படம் எடுக்கவும் தவறவில்லை. இம்மாநாட்டில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

தவிர்க்க வேண்டும என்றும் அவர் கூறி-னார்.



இந்த மாநாட்டில் ஊடகங்களுக்கு அரசாங்கம் சட்டங்களை விதித்து தடை-களை ஏற்படுத்துவதை விட தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளும் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை முறை சிறந்தது என்ற கருத்து வரவேற்கப்பட்டது.

அத்துடன் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் மக்களுக்கு தகவல்களை அறிவதற்கு இருந்து வரும் உரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும். அவ்வாறே ஊடகங்களும் தவறுகள் எற்படுகின்றபோது தாமே முன்வந்து அத்தவறுகளைத் திருத்தம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக தவறிழைக்க வேண்டும் என்பதல்ல. இயன்ற வரையில் பொறுப்புணர்வுடன் செய்பட வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகும்.

- தவறு அல்லது தகவல் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டால் அதற்காக திருத்தங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்
- வன்முறைகளால் அல்லது விபத்துக்களால் அல்லது மனக்கிலேசத்தை ஏற்படுத்தும்விதமான புகைப்படங்களைப் பிரசுரிக்கின்றபோது மக்களின் மனத்தாக்கங்களைப் புரிந்து கொண்டு ஆத்திரத்தைத் தூண்டும் வகையானதும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களதும் புகைப்படங்களைப் பிரசுரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- அறிக்கையிடலிலும் செய்தி அரையிலும் ஒழுக்கக்கோவையைப் பின்பற்றல் அவசியமாகின்றது. ஒழுக்க நெறிக்கோவையே சிறந்த அறிக்கையிடலுக்கு காரணமாகினறது.
- ஊடகவியலாளர்கள் மக்களின் காவலர்கள் என்பதோடு அவர்கள் பொதுமக்கள் ஆர்வத்தைக் கருத்தில் கொண்டவர்களாகவே செயற்படுகி ன்றார்கள்.
- ஒழுக்க நெறிக்கோவை மீறப்பட்டு முரண்பாடான விடயங்கள் முன்வைக்கப்படும் போது சட்டங்கள் முன்னிலைப்படுத்தப்படும் நிலை ஏற்படலாம். அதன-ால் ஒழுக்கக்கோவை சட்டத்தடைகளில் இருந்து பாதுகாப்பளிக்கின்றது.
- ஊடகவியலாள்களால் ஒழுக்கக்கோவையை மீறுவது பாரிய குற்றமாகும்.
- ஓவ்வொருவரதும் தனிப்பட்ட வாழ்க்கை மி-கவும் முக்கியமானதாகும். அதனால் செய்திகளிலும் புகைப்படங்களிலும் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் தகவல்கள் கருத்துக்கள் முன்வைக்கப்படுவது அவசியமாகின்றது.

இந்த அடிப்படையில் கோவாவில் நடைபெற்ற மாநாட்டிலும் பெல்ஜியத்திலும் நடைபெற்ற சர்வதேச ஊடக மாநாடுகளில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கையின் நிலையில் இருந்து நோக்குகையில் இவை எமது நாட்டின் இன்றைய ஊடக போக்குகளின் அடிப்படையில் மி-கவும் முக்கியமானதாக அமைகின்றது.

இலங்கையில் இத்தகைய ஊடகங்களுக்கு சிறந்த முன்மாதிரியைக் காட்டும் ஒழுக்கக்கோவையை முன்வைத்துள்ளமை இலங்கையில் முன்னோடி நடவடிக்கையாகும் என்ற விடயம் இம்மாநாடுகளில் வெகுவாகப் பாரட்டப்பட்ட விடயமாகும்.

# கம்பஹா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு

கம்பஹா மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர் களுக் காக இலங்கை பத்திரிகை முறைபாபட்டு ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள பத்திரிகை துறை-ரசார் ஒழுக்கக்கோவை பற்றிய கலந்துரையாடல் 2012 டிசம்பர் மாதம் 11ம் திகதி காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை சாகெத மெதுர ஹோட்டலில் நடைபெறும்.

இதே தினத்தில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றி சிவ-ில் சமூகப் பிரதிநிதிகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணி முதல் மாலை-லை 5.00 மணிவரை நடைபெறும்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஏற்கனவே பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் இதுபோன்ற அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அளவுக்கதிகமாக தற்கொலைகளை விவரிக்கும் செய்திகளை பிரசுரிப்பதாக இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கவலை

இங்கிலாந்தின் வில்செயர் கசட் மற்றும் ஹெரல்ட் ஆகிய பத்திரிகைகள் தற்கொலை பற்றிய அறிக்கையிடலின்போது எல்லை மீறிய நிலையில் தற்கொலையின் விபரத்தை பிரசுரித்தமைக்காக எச்சரிக்கை செய்யப்பட் டிருக்கின்றது.

அந்நாட்டின் பத்திரிகைத்துறையினருக்கான ஒழுக்கக் கோவையின் பிரிவு 5 ஐ தற்கொலை தொடர்பான அறிக்கையிடல் பற்றி விளக்குவதாய் அமைந்திருக்கின்றது. அதன்படி தற்கொலை பற்றிய விடயம் செய்தியாக பிரசுரம் செய்யப்பட்டபோதும் அந்த தற்கொலை எவ்வாறு செய்து கொள்ளப்பட்டது என்பது தொடர்பாக விவரிக்கக் கூடாது என்றும் தற்கொலைக்காக பயன்படுத்திய திரவங்கள் மற்றும் நச்சுப் பதார்த்தங்களின் பெயர்களை வெளியிடக் கூடாது என்றும் கூறுகின்றது.

அத்துடன் தற்கொலை எவ்வாறு செய்து கொள்ளப்பட்டது என்ற விடயம் விவரமாக பிரசுரிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதோடு தற்கொலையை வீர காவியமாக சித்தரிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

மேற்படி இரண்டு பத்திரிகைகளும் இந்த ஒழுக்கக்கோவையின் பிரிவுகளை மீறியிருப்பதாக இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு குற்றம் சாட்டியிருப்பதோடு அவற்றுக்கு எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றது.

எமது நாட்டிலும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையின் பிரிவு 6:6 இவ்வறான தற்கொலை அறிக்கையிடலில் தவிர்க்க வேண்டிய விடயங்கள் பற்றி தெளிவு படுத்துகின்றது. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அன்றாட செய்தி அறிக்கையிடல்களைக் கண்காணித்து இவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றபோது பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு அதுபற்றி அறிவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

---

# கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தப்படும் கட்டுரைப் போட்டி

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குகுழு கல்வி அமைச்சுடன் இணைந்து, உயர்தர வகுப்பு மாணவர்களிடையில் ஆராவது முறையாகவும் அகில இலங்கை ரீதியாக கட்டுரைப் போட்டியொன்றை நடத்த திட்டமிட்டிருக்கின்றது.

கல்வி அமைச்சு 2012 ஆம் வருடம் அகில இலங்கை ரீதியில் நடத்திய ஆக்க திறன் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி மாகாண மட்டங்களில் வெற்றிபெற்ற 12 ஆம் 13 ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் .

இதில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கான கடிதங்கள் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதோடு எழுதப்பட்ட கட்டுரைகளை இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய கடைசித் தினம் 2012 டிசம்பர் 10 ஆம் திகதி ஆகும்.

ஊடகங்களின் சரியான செயற்பாடு மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பாக மாணவர்களிடையும் பொதுமக்கள் மத்தியிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படும் இக்கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு மொழிமூலமும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு முறையே ரூபா. 5000. ரூபா. 4000. ரூபா. 3000. என்ற அடிப்படையில் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

---

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை**
சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் டி சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா ஹப்புஆராச்சி.

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்**
சுகுமார் ரொக்வூட் – பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி

Editor: Sukumar Rockwood - PCCSL
Design & Layout by : Priyadharshini - *SLPI*